DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KARUR

C.C. No. 183/2025

Prosecution PW 1

Deposition of Witness for Defence

Court

Name : கண்மணி

Husbandr's Name : குபேந்திரன்

Village :

Taluk :

District :

Age :

Calling :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of 02.04.2026.

**1 மற்றும் 2 எதிரிகள் பி.டி. வாரண்ட் மூலமாக நேரில் ஆஜர்படுத்தப்பட்டனர்.**

**முதல் விசாரணை**

நான் தற்போது தாந்தோணிமலை, காமராஜர் நகரில் குடியிருந்து இல்லத்தரசியாக இருந்து வருகிறேன். எனது கணவர் குபேந்திரன் சூர்யா இண்டர்நேஷனல் நிறுவனத்தில் ஏஜிஎம் ஆக பணிபுரிந்து வருகிறார். அதன் அலுவலகம் கேரள மாநிலம் செங்கனூரில் உள்ளது. கிளை அலுவலகம்

தமிழ்நாட்டில் உள்ளது. எனது கணவர் வெளியூர் செல்லும்போது ராசிபுரத்திலுள்ள எனது அம்மா வீட்டிற்கு சென்றுவிடுவேன். எனது கணவர் 08.09.2024ம் தேதி கேரள மாநிலம் கண்ணூருக்கு வேலை நிமித்தமாக சென்றுவிட்டதால் நான் 09.09.2024ம் தேதி காலையில் எனது அம்மா வீட்டிற்கு சென்றுவிட்டேன். என் கணவர் கேரளாவிலிருந்து 12.09.2024ம் தேதி காலையில் காமராஜர் நகரிலுள்ள என்னுடைய வீட்டிற்கு வந்துவிட்டார். நான் அன்றைய தினம் மாலை 04.00 மணியளவில் எனது அம்மா வீட்டிலிருந்து என்னுடைய வீட்டிற்கு வந்துவிட்டேன். மறுநாள் என்னுடைய உறவினரின் கல்யாணத்திற்கு செல்வதற்காக என்னுடைய அம்மா வீட்டிலிருந்து ஆரம் 6 பவுன், நெக்லஸ் 3 பவுன், கோதுமை செயின் 2 பவுன், பட்டை மாடல் செயின் 2 1/2 பவுன், ஆண்கள் அணியும் கை செயின் 2 1/4 பவுன், பெண்கள் அணியும் கை செயின் 1 பவுன், ஜிமிக்கி தோடு ஒரு ஜோடி 1 பவுன், கல் தோடு ஒரு ஜோடி 1 பவுன், தங்க காசு ஒன்று 1/4 கிராம் ஆக மொத்தம் 19 பவுன் நகைகளை என்னுடைய வீட்டிற்கு எடுத்து வந்தேன். 13.09.2024ம் தேதி எனது கணவர் கும்பகோணத்திலுள்ள கர்வரட்சாம்பிகை கோவிலுக்கு செல்லலாம் என்று கூறியதன்பேரில் வீட்டின் மெயின் கதவை பூட்டியும், வெளி இரும்பு கேட்டை பூட்டிவிட்டு அன்றைய தினம் அதிகாலை 01.15 மணியளவில் எனது கணவரின் அலுவலக காருக்கு ஆக்டிங் டிரைவர் போட்டு கோவிலுக்கு கிளம்பினோம். அன்றைய தினம் மதியம் 03.00 மணியளவில் நாங்கள் வீட்டிற்கு வந்தோம். அப்போது வெளியில் கேட் பூட்டிய நிலையில் இருந்தது. அதை திறந்து உள்ளே சென்று பார்த்தபோது நிலக்கதவு உடைந்திருந்தது. உள்ளே சென்று பார்த்தபோது, பெட்ரூமில் இருந்த நகைகள் வைத்திருந்த அலமாறி திறந்து துணிகள் எல்லாம் கலைந்து கிடந்தது. அன்றைய தினம் இரவு 08.30 மணியளவில் காவல் நிலையம் சென்று மேற்படி திருட்டு போன நகைகளை கண்டுபிடித்து தருமாறு புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரிலுள்ள

கையொப்பம் என்னுடையதுதான். **அந்த புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** 28.11.2024ம் தேதி தாந்தோணிமலை காவல் நிலையத்திலிருந்து என்னை அழைத்து எங்களுடைய வீட்டில் திருடிய இரண்டு நபர்களை புதுக்கோட்டை மாவட்டத்தில் கைது செய்து வைத்திருப்பதாகவும், அங்கிருந்து நாங்கள் அழைத்து வந்திருக்கிறோம் என்று கூறி என்னை காவல் நிலையத்திற்கு வரச் சொன்னதன்பேரில் நானும், எனது கணவரும் காவல் நிலையம் சென்றோம். அங்கு ஆஜர் எதிரிகள் இருந்தார்கள். அங்கு ஆஜர் எதிரிகளை காண்பித்து அவர்கள்தான் எங்களுடைய வீட்டில் திருடிய நபர்கள் என்று போலிசார் கூறினார்கள். 03.03.2025ம் தேதி இந்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து திருடு போன என்னுடைய நகைகளை பெற்று சென்றுவிட்டேன். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்திலுள்ள நகைகள் என்னுடையதுதான். **அந்த புகைப்படம் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை (எதிரிகள் தரப்பில்)**

நான் எம்.இ. படித்துள்ளேன். அ.சா.ஆ.1 புகாரை நான்தான் எழுதினேன். அ.சா.ஆ. புகாரிலுள்ள விவரங்களை யார் சொல்ல சொல்ல எழுதினேன் என்றால் நடந்த சம்பவம் பற்றி எனக்கு தெரியும். அதனால் நான்தான் எழுதினேன். முதல் விசாரணையில் சொல்லியுள்ள நகைகள் என்னுடையதா அல்லது எனது அம்மாவுடையதா என்றால் என்னுடைய நகைகள்தான். மேற்சொன்ன நகைகளை நான் என்னுடைய அம்மா வீட்டில் இருந்துதான் எடுத்து வந்தேன். மேற்சொன்ன நகைகள் என்னுடையதுதான் என்பதற்காக ரசீது எதுவும் போலிசாரிடம் கொடுக்கவில்லை என்றால் சரிதான். பூட்டு உடைக்கப்பட்டதாக சொல்லியுள்ள நிலையில் அது எந்த வகையான பூட்டு என்றால் நிலக்

கதவிலேயே இருக்கும் பூட்டு ஆகும். மேற்சொன்ன தகவலை போலிசார் புகைப்படம் எடுத்தார்களா என்றால் எடுத்தார்கள். எதிரிகளை போலிசார் சொல்லித்தான் தெரியும் என்றால் சரிதான். என்னுடைய நகைகளை யாரோ திருடிவிட்டார்கள் என்றாலும், நான் கொடுத்த அழுத்தத்தால் வேறு வழியில்லாமல் ஆஜர் எதிரிகளை பொய்யாக இவ்வழக்கில் சேர்த்துள்ளார்கள் என்றாலும் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

**ஒம்./—எஸ்.பி.பரத் குமார்**
**நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்**